**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 61/2024**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 சத்தியமூர்த்தி திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 06.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனது சொந்த ஊர் திண்டுக்கல் மாவட்டம், வேடச்சந்தூர் வட்டம், தென்னம்பட்டி கிராமம். கடவூர் வட்டத்தில் நான் எப்போது பணிக்கு சேர்ந்தேன் என்றால் 2018 ம் வருடம் சேர்ந்தேன். புகார் கொடுத்த போது நான் கடவூரில் என்ன பணியில் இருந்தேன் என்றால் வருவாய் ஆய்வாளராக பணியில் இருந்தேன். வருவாய் ஆய்வாளரின் கீழ் எத்தனை கிராமம் உள்ளது என்றால் 6 கிராமம் உள்ளது. வாதி எனது வருவாய் கிராமத்திற்கு உட்பட்டவர் என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதி பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வாதி குடியிருப்பது கடவூர் வட்டம், மாவத்துார் கிராமம், சின்னாம்பட்டி என்றால் சரிதான்.

2) வாதி மாவத்துார் பஞ்சாயத்தில் 3 முறை ஊராட்சி மன்ற உறுப்பினராக இருந்த விபரம் தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. வழக்குரையில் சொல்லியிருப்பதன் அடிப்படையில் தெரியும். மாவத்துார் பள்ளியில் கிராம கல்வி குழு தலைவராக இருந்தாரா என்றால் வாக்குமூலத்தின் அடிப்படையில் தெரியும். வாதி அரசியல் இயக்கத்துடன் இருக்கிறாரா என்றால் அது பற்றி தெரியாது. நான் வாதிக்கு எதிராக புகார் கொடுப்பதற்கு முன்பு வாதியை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் சுமார் 1, 2 வருடங்களாக தெரியும். நான் பணிபுரியும் அலுவலகத்திற்கும், வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் ஒரு சமூக ஆர்வலர் என்ற முறையில் வாதி அடிக்கடி வருவாரா என்றால் யாருடனாவது வருவார்.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Sd/–R. தமிழரசி**
**Principal District Munsif,**
**Kulithalai.**